பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

**01 12 2025 MONDAY 12.40 PM**

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

**1.** நாடாளுமன்ற குளிர்கால கூட்டத்தொடர் இன்று தொடங்கியது. எதிர்க்கட்சிகளின் அமளி காரணமாக மக்களவை பிற்பகல் இரண்டு மணி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

**2.** நாட்டின் வளர்ச்சிக்கு உத்வேகம் அளிக்கும் வகையில் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அவை நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு தர வேண்டும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி கேட்டுக்கொண்டுள்ளார்.

**3.** எல்லை கடந்த உயிரி ஆயுத பயன்பாட்டை தடுக்க சர்வதேச அளவிலான ஒத்துழைப்பு தேவை என்று வெளியுறவு அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் வலியுறுத்தியுள்ளார்.

**4.** நாகாலாந்து மாநிலத்தின் 63-ஆவது நிறுவன நாள் இன்று கொண்டாடப்படுகிறது.

**5.** சென்னை, செங்கல்பட்டு மாவட்டங்களின் ஓரிரு இடங்களில் அடுத்த 24 மணிநேரத்தில் கனமழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

-- இனி விரிவான செய்திகள் ---

<<<<<>>>>>>>

நாடாளுமன்ற குளிர்கால கூட்டத்தொடர் இன்று தொடங்கியது.

மாநிலங்களவைத் தலைவராக பொறுப்பேற்றுள்ள திரு சி பி ராதாகிருஷ்ணனுக்கு, பிரதமர் திரு நரேந்திர மோடி அவையில் வாழ்த்து தெரிவித்தார்.

எளிய விவசாயக் குடும்பத்தில் இருந்து, குடியரசு துணைத்தலைவராக பொறுப்பேற்றுள்ள திரு சி பி ராதாகிருஷ்ணன், தமது வாழ்க்கையை மக்கள் பணிக்காக அர்ப்பணித்துக் கொண்டுள்ளார் என்று குறிப்பிட்டார்.

மக்களவை இன்று காலை கூடியதும் மறைந்த உறுப்பினர்கள் தர்மேந்திரா, கர்னல் சோனாராம் சௌத்ரி, பேராசிரியர் விஜய்குமார் மல்ஹோத்ரா, ரவி நாயக் ஆகியோருக்கு இரங்கல் தெரிவிக்கப்பட்டது.

பின்னர், கேள்விநேரம் தொடங்கியதும், திமுக, காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கேள்விநேரத்தை ஒத்திவைத்துவிட்டு, வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப்பணிகள் குறித்து விவாதிக்க வேண்டும் என வலியுறுத்தினர்.

இதற்கு அவைத்தலைவர் திரு ஓம். பிர்லா அனுமதி மறுத்தார்.

இதனையடுத்து, எதிர்க்கட்சி உறுப்பினர்கள் தொடர் அமளியில் ஈடுபட்டதால் அவை நண்பகல் 12 மணிவரை ஒத்திவைக்கப்பட்டது.

நாடாளுமன்ற நடவடிக்கைகளில் கேள்விநேரம் மிக முக்கியமானது என்றும், அதன் செயல்பாட்டை முடக்குவது ஜனநாயகத்திற்கு எதிரானது என்றும் திரு ஓம். பிர்லா தெரிவித்துள்ளார்.

பின்னர் அவை கூடியதும், அவையில் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் தொடர்ந்து அமளியில் ஈடுபட்டதால், பிற்பகல் இரண்டு மணிவரை மக்களவை ஒத்திவைக்கப்பட்டது.

<<<<<>>>>>>>

நாடாளுமன்ற குளிர்கால கூட்டத்தொடர் நாட்டை வளர்ச்சிப் பாதையில் கொண்டு செல்லும் வகையில் அமைய வேண்டும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி வலியுறுத்தியுள்ளார்.

இன்று காலை புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், நாட்டின் பொருளாதாரம் குறிப்பிட்டு சொல்லும் அளவுக்கு உயர்ந்துள்ளதாக கூறினார்.

வளர்ச்சியடைந்த இந்தியாவை உறுதி செய்வதற்கான நம்பிக்கையை நாட்டின் பொருளாதாரம் நமக்கு அளித்திருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

ஜனநாயக பாதையில் வளர்ச்சியை உறுதி செய்யும் முயற்சியை இந்தியா மேற்கொண்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

எதிர்க்கட்சியினர் அண்மையில் நடந்த தேர்தலில் அடைந்த தோல்வியை கருத்தில்கொண்டு அதிருப்தியை தெரிவிக்கும் வகையில், நாடாளுமன்ற நடவடிக்கைகளுக்கு பாதிப்பு ஏற்படுத்தக்கூடாது என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

நேர்மறையான சிந்தனையுடன் நாட்டை கட்டமைக்கும் முயற்சிக்கு அவர்கள் ஒத்துழைப்பு தர வேண்டும் என்றும் பிரதமர் கேட்டுக்கொண்டார்.

நாடாளுமன்றத்தில் புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள உறுப்பினர்கள் மற்றும் இளைஞர்களுக்கு பேசுவதற்கு வாய்ப்பு அளிக்கப்பட வேண்டும் என்றும் பிரதமர் திரு நரேந்திர மோடி கேட்டுக்கொண்டார்.

<<<<<>>>>>>>

சிவகங்கை பேருந்து விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு பிரதமர் திரு நரேந்திர மோடி ஆழ்ந்த இரங்கல் தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், இந்த விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா இரண்டு லட்சம் ரூபாயும், காயமடைந்தவர்களுக்கு தலா 50 ஆயிரம் ரூபாயும் நிவாரணம் வழங்கப்படும் என்று அறிவித்துள்ளார்.

<<<<<>>>>>>>>

தமிழகத்தின் செங்கல்பட்டு மாவட்டம் திருக்கழுக்குன்றத்தில் இன்று காலை அரசு பேருந்தும், தனியார் வேனும் மோதிய விபத்தில், வேனில் பயணம் செய்த இரண்டு பெண்கள் உயிரிழந்தனர்.

இந்த விபத்தில் காயமடைந்தவர்கள் செங்கல்பட்டு, பூஞ்சேரி ஆகிய இடங்களில் உள்ள அரசு மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் தமது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துள்ளார்.

அவர்களுக்கு தலா 3 லட்சம் ரூபாய் நிவாரணம் வழங்கவும் அவர் உத்தரவிட்டுள்ளார்.

பலத்த காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவர்களுக்கு தலா ஒரு லட்சம் ரூபாயும், லேசான காயமடைந்தவர்களுக்கு தலா 50 ஆயிரம் ரூபாய் வழங்கவும் முதலமைச்சர் உத்தரவிட்டுள்ளார்.

<<<<<>>>>>>>>

நாட்டின் பொருளாதார சுதந்திரம் உறுதி செய்யப்படுவதோடு மட்டுமின்றி, உலகளாவிய பொருளாதாரத்தில் இந்தியா தன்னை விரிவுபடுத்தி வருவதாக குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று காலணி வடிவமைப்பு கல்லூரி பட்டமளிப்பு விழாவில் உரையாற்றிய அவர், காலணி உற்பத்தித்துறையின் மூலம், கடந்த நிதியாண்டில் 2 ஆயிரத்து 500 மில்லியன் டாலர் அளவுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

2047-ஆம் ஆண்டுக்குள் வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்க வேண்டும் என்ற இலக்கை எட்டுவதற்கு இளைஞர்கள்

தங்களது திறனை மேம்படுத்திக் கொள்ள வேண்டும் என்று குடியரசுத் தலைவர் கூறினார்.

<<<<<>>>>>>>

சர்வதேச அளவில் உயிரி ஆயுதங்களை முறைகேடாக பயன்படுத்துவதை தடுப்பதற்கான வழிவகைகளை புதுதில்லியில் நடைபெற்றுவரும் உயிரி ஆயுதங்கள் கூட்டமைப்பு மாநாட்டில் விவாதிக்கப்படும் என்று வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், **80**-க்கும் மேற்பட்ட நாடுகளை சேர்ந்த நிபுணர்கள் மற்றும் கல்வியாளர்கள் இதுகுறித்து விரிவாக விவாதிக்க உள்ளதாக தெரிவித்தார்.

எல்லை கடந்து உயிரி ஆயுதங்கள் முறைகேடாக பயன்படுத்துவதை தடுக்க சர்வதேச அளவிலான ஒத்துழைப்பு அவசியம் என்றும் டாக்டர் ஜெய்சங்கர் கூறினார்.

<<<<<>>>>>>>

நாகாலாந்து மாநிலத்தின் **63**-ஆவது நிறுவன நாள் இன்று கொண்டாடப்படுகிறது.

1963-ஆம் ஆண்டு நாட்டின் 16-ஆவது மாநிலமாக உதயமான நாகாலாந்தும், அம்மாநில மக்களுக்கும் குடியரசுத் தலைவர், பிரதமர், உள்துறை அமைச்சர் உள்ளிட்ட தலைவர்கள் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு விடுத்துள்ள செய்தியில், வளமான கலாச்சாரத்தையும், எழில் கொஞ்சும் இயற்கையையும் கொண்டு சிறந்த மாநிலமாக நாகாலாந்து திகழ்கிறது என்று கூறியுள்ளார்.

அம்மாநிலத்தில் உள்ள பழங்குடியின மக்கள் ஒன்றுபட்டு நாட்டுக்கு பெருமை சேர்த்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அமைதியும், வளர்ச்சியும் பெற்று நாகாலாந்து தழைத்தோங்க வேண்டும் என்றும் திருமதி திரௌபதி முர்மு தமது வாழ்த்து செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

பிரதமர் திரு நரேந்திர மோடி விடுத்துள்ள வாழ்த்து செய்தியில், நாகாலாந்து வளமான கலாச்சாரத்தில் மட்டுமன்றி, சேவை, இரக்கம், தைரியம் உள்ளிட்ட நற்பண்புகளோடு நாட்டு மக்கள் அனைவரும் போற்றும் வகையில் அமைந்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

நாட்டின் வளர்ச்சிக்கு அம்மாநில மக்களின் பங்களிப்பு முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது என்றும் பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா விடுத்துள்ள வாழ்த்து செய்தியில், தொன்மை சிறப்பு மிக்க இம்மாநிலம் மக்களின் அயராத உழைப்பினால் வளர்ச்சி பெற்றுள்ளதாக தெரிவித்துள்ளார்.

நாட்டின் கலாச்சாரத்தை வலுப்படுத்தும் வகையில் நாகாலாந்து மாநிலம் சிறந்து விளங்குவதாகவும் திரு அமித் ஷா கூறியுள்ளார்.

<<<<<>>>>>>>

இந்தோனேஷியாவில் ஏற்பட்டுள்ள கடும் புயல் மழை காரணமாக உயிரிழந்தோர் எண்ணிக்கை 442-ஆக அதிகரித்துள்ளது.

வடக்கு சுமத்ரா, மேற்கு சுமத்ரா, **Aceh** மாகாணங்களில் அந்நாட்டின் பேரிடர் மீட்புப்படையினர் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

சுமத்ரா தீவில் புயலால் பலத்த சேதம் ஏற்பட்டுள்ளது.

அப்பகுதிகளில் மின்சாரம் முழுமையாக துண்டிக்கப்பட்டுள்ளது.

இந்தோனேஷிய பிரதமர் திரு **Prabowo Subianto** மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளை நேரில் பார்வையிட்டார்.

சென்யார் என்று அழைக்கப்படும் இந்த புயலால், பல இடங்களில் நிலச்சரிவும் ஏற்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

<<<<<>>>>>>>

வங்கக்கடலில் உருவான **Ditwah** புயல் தமிழ்நாடு, புதுச்சேரி கரையையொட்டிய தென்மேற்கு வங்கக்கடல் பகுதியில் ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுவிழந்துள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் திரு செந்தாமரை கண்ணன் தெரிவித்துள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

***(Voice Byte — செந்தாமரை கண்ணன் - 47 Sec. )***

<<<<<>>>>>>>

**21** வயதுக்கு உட்பட்டோருக்கான உலகக்கோப்பை ஹாக்கிப்போட்டியில் இந்தியா இன்று ஜெர்மனியை எதிர்கொள்கிறது.

-----------

அகமதாபாத் மாரத்தான் போட்டியின் ஆடவர் பிரிவில் **Nikhil Singh-**கும், மகளிர் பிரிவில் அஷ்வினி ஜாதவும் சாம்பியன் பட்டத்தை வென்றுள்ளனர்.

**<<<<<END>>>>>>**